**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>**

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 6–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**<u>இ.ம.எண். 2/2024 இன் அ.வ.எண்.136/2018</u>**

**<u>CNR No. TNSA13-000200-2018</u>**

விஜயா . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மூர்த்தி
2. சத்யா . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

3. துரைசாமி
4. தமிழரசன்
5. ரமேஷ்
6. பார்த்திபன்
7. சார்பதிவாளர், ஆத்தூர் . . . 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ எதிர்நோக்கு தரப்பினர்கள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 06.02.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், 7ம் எதிர்மனுதாரர்/ எதிர்நோக்கு தரப்பினர் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு தாவாவில் 3 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்து

வழக்கை நடத்த அனுமதி அளிக்குமாறு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

II. **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர், வழக்கில் வாதி என்றும், வழக்கானது 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனித்த சுவாதீனம், விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருவதாகவும், தாவா சொத்து இந்து அபிபக்த பாகம் பிரியாத கூட்டுக்குடும்ப சொத்து என்றும், தாவா சொத்தில் மனுதாரர் கூட்டு அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருவதாகவும், இந்நிலையில் கூட்டு அனுபவ சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தி மனுதாரருக்கு உண்டான பாகத்தை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 1, 2 எதிர்மனுதாரர்கள் 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து போலியான ஆவணங்கள் தயார் செய்து அந்த ஆவணத்தை 7ம் எதிர்மனுதாரர் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய முயன்று வருவதாகவும், அவ்வாறு செயல்பட எதிர்மனுதாரர்களுக்கு உரிமை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் ஆத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.136/2018 என்ற எண்ணில் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து விசாரணையில் உள்ளதாகவும், அதனால் தாவா சொத்து குறித்து வரும் ஆவணங்களை பதிவு செய்ய வேண்டாமென்றும் கூறி, ஆட்சேபனையை தெரிவித்ததாகவும், ஆனால் 7ம் எதிர்மனுதாரர் ஆட்சேபனையை நேரில் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டதால், வேறு வழியின்றி பதிவு தபால் மூலம் ஆட்சேபனையை 01.08.2024 அன்று அனுப்பியதாகவும், அதனை 7ம் எதிர்மனுதாரர் 02.08.2024 ஆம் தேதி பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி 1, 2 எதிர்மனுதாரர்கள், 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து மனுதாரரது பாகத்தினையும் சேர்த்து கிரயம், எக்ரிமெண்ட், முச்சலிக்கா, பவர் ஆப் அட்டர்னி, குதவை, அடமானம் முதலான தஸ்தாவேஜிகளை உருவாக்கி அதனை 7ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்தால் மனுதாரருக்கு ஈடு

செய்ய இயலாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், வழக்கு நிலுவையில் உள்ள போது சட்டத்திற்கு புறம்பாக செயல்பட மேற்படி எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு உரிமையும் இல்லை என்றும், ஒரு கூட்டு உரிமையாளரின் பாக சொத்தினையும் சேர்த்து மற்றொரு பாகஸ்தர் வில்லங்க விற்கிரய பராதீனம் செய்ய யாதொரு உரிமையும் இல்லை என்றும், எனவே 3 முதல் 7 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் 3 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த வேண்டியது மிகவும் அவசியம் என்றும், அவர்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பதால் வழக்கின் சாராம்சமோ, வழக்கு மூலமோ, பரிகாரமோ மாறாது என்றும், எனவே 3 முதல் 7 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 3 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

III. <u>7 ம் எதிர்மனுதாரர்/எதிர்நோக்கு தரப்பினரின் எதிருரையின் சுருக்கம்:</u>

7 ம் எதிர்மனுதாரர், இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்தும், மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மனுதாரருக்கும் எதிர்மனுதாரர்களுக்கும் இடையிலான தகராறு என்றும், 7 ம் எதிர்மனுதாரருக்கு வழக்கின் சொத்துக்களில் யாதொரு தொடர்பும் இல்லை என்றும், 7 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி இந்திய பதிவுச் சட்டத்தின் விதி 55 மற்றும் அதன் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையை மட்டுமே பின்பற்ற முடியும் என்றும், எனவே 7 ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**IV.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் மனுதாரர்கள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்.

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி, 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை, தனித்த சுவாதீனம், விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கானது விசாரணைக்கு நிலுவையில் உள்ள நிலையில் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் போலியான ஆவணங்களை ஏற்படுத்தி அவற்றை 7 ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய

முயற்சிப்பதாகவும் எனவே அவர்களை இவ்வழக்கில் 3 முதல் 7 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை நடத்த வேண்டும் என வாதிடப்பட்டது.

மாறாக 7ம் எதிர்மனுதாரர்/எதிர்நோக்கு தரப்பினர் தரப்பில், வழக்கானது வாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கிடையேயான தனிப்பட்ட பிரச்சனை என்றும், இந்திய பதிவுச் சட்டத்தின் விதி 55 மற்றும் அதன் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறையை மட்டுமே பின்பற்றி 7ம் எதிர்மனுதாரர் செயல்படுவதாகவும், 7ம் எதிர்மனுதாரருக்கும் வழக்கு சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், எனவே 7ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்கு அவசியமற்ற நபர் என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் வாதிடப்பட்டது. 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பியும் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

மனுவையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், 1, 2 எதிர்மனுதாரர்கள், 3 முதல் 6 எதிர்மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து மனுதாரரது பாகத்தினையும் சேர்த்து கிரயம், எக்ரிமெண்ட், முச்சலிக்கா, பவர் ஆப் அட்டர்னி, குதவை, அடமானம் ஆகிய ஆவணங்களை உருவாக்கி அதனை 7ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய முயன்று வருவதாக மனுதாரர் கூறியுள்ள நிலையில் அவர்களையும் இவ்வழக்கில் சேர்த்து தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கு தரப்பினர்கள் இவ்வழக்கின் அவசிய தரப்பினர்கள் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

V. தீர்வு

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 6–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.06 18:38:51 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

3. எதிர்மனுதாரர்கள்/எதிர்நோக்கு தரப்பினர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.02.06 18:38:58 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண்.2/2024 இன்
அ.வ.எண்.136/2018
நாள் : 06.02.2026